# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2056/16 - 2018 ජනවාරි 30 වැනි අඟහරුවාදා - 2018.01.30

*2056/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்*

*64(5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்*

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றான ஐக்கிய தேசியக் கட்சியினால் பெயர்குறித்து, அரசியலமைப்பின் 99(அ) என்னும் உறுப்புரையின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. மொஹொமட் ஹபீல் மொஹொமட் சல்மான் அவர்கள் கேட்டு விலகியுள்ளதன் காரணமாக எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் பதவியொன்று வெற்றிடமாகியுள்ளதென, 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தம் செய்யப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (5) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;*

*அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென அந்த அரசியற் கட்சியின் செயலாளர் மேற்குறித்த பிரிவின் கீழ் தகவுடைய ஆளொருவரை பெயர்குறித்து நியமிக்கும்படி தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,*

*மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. அகமதுலெப்பை முஹம்மது நசீர் என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்,*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவிற்கமைய செயற்பட்டு, மேற்குறித்த திரு. மொஹொமட் ஹபீல் மொஹொமட் சல்மான் என்பவர் கேட்டு விலகியுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. அகமதுலெப்பை முஹம்மது நசீர் என்பவர் எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனத் தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

| | | |
|---|---|---|
| *மஹிந்த தேசப்பிரிய,* | *என். ஜே. அபேசேகர,* | *எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,* |
| *தவிசாளர்,* | *அங்கத்தவர்,* | *அங்கத்தவர்,* |
| *தேர்தல் ஆணைக்குழு.* | *தேர்தல் ஆணைக்குழு.* | *தேர்தல் ஆணைக்குழு.* |

*தேர்தல் ஆணைக்குழு,*
*இராஜகிரிய,*
*2018, சனவரி 30.*

*2-522*